2024 – செப்டம்பர் மாதம் 24– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 174 / 2019*

*2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய R W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | R W 1, கார்த்திகேயன் |
| தகப்பனார் பெயர் | : | ஜானகிராமன் |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | நிர்வாக அலுவலர் |
| வயது | : | 45 |

**தேதி: 24.09.2024.**

**முதல் விசாரணை:–**

நான் 2–ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகின்றேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை 2–ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

எங்கள் நிறுவனத்தில் நியமனம் செய்யப்பட்ட புலனாய்வு அலுவலர் வழங்கிய புலனாய்வு அறிக்கை **எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

**குறுக்கு விசாரணை:– ( மனுதாரர் தரப்பில்)**

எ.சா.ஆ.1 –ல் உள்ள தகவல்கள் அனைத்தும் கோப்பின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் புலனாய்வு

அதிகாரி அறிக்கையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புலனாய்வு அதிகாரி 18.01.2020–ம் தேதி அறிக்கையை கொடுத்தார். தகுந்த நீதிமன்றத்திலோ அல்லது தகுந்த அதிகாரியிடமோ விபத்தில் இந்த வாகனம் சம்மந்தப்படவில்லையென்பது குறித்து புகார் அளித்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தை எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த வாகனம் 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்றும், அதனால் எங்கள் நிறுவனம் விபத்து இழப்பீட்டுத்தொகை வழங்க கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:– இல்லை.**

**ஒப்பம்/– சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**